**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 282/2024 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பாபு | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. தங்கப்பன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 22.05.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது பொன்மனை முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். கடந்த 29.09.2023ம் தேதியன்று சித்திரன்கோட்டு, சாண்டத்தில் எனது மகன் கோயம்புத்தூரில் படித்துக் கொண்டு விடுமுறைக்காக ஊருக்கு வந்த போது மருந்துக்கோட்டையில் உள்ள எனது தங்கை வீட்டிற்கு குற்றம் சுமத்தப்பட்ட நபருடன் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் இருசக்கர வாகனத்தினை வேகமாக ஓட்டியதில் வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்த என் மகன் பின்நோக்கி மல்லாந்து விழுந்ததில் பின் மண்டையிலும், இரண்டு கை முட்டியிலும், கால் முட்டியிலும் இரத்த காயம் ஏற்பட்டு முதலில் தக்கலை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் சென்றோர்கள், அதன் பின் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அதன் பின்னர் பொன்ஜெஸ்லி தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம்.

2. சிகிச்சை பலனின்றி எனது மகன் 06.10.2023ம் தேதியன்று இறந்துவிட்டார். விபத்து சம்பந்தமாக கொற்றிக்கோடு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது

தான். அதில் கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

என் மகன் இறந்த பிறகு போலீசார் விசாரித்தார்களா என்றால் ஸ்பாட்டில் விசாரித்தார்கள். இறந்த பிறகும் விசாரித்தார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் தாய் மாமாவின் பையன் ஆவார். எனது புகார் மனுவிலும் போலீசார் விசாரணையிலும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வாகனத்தினை வேகமாக ஓட்டியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் எனது புகார் மனுவில் என் மகனுக்கு நடுக்கம் ஏற்பட்டு பின்னால் விழுந்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர் இருசக்கர வாகனத்தில் மெதுவாக தான் சென்றார் என்றும் எனது மகனுக்கு பிட்ஸ் வந்ததால் தடுமாறி அவரே கிழே விழுந்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. புகார் மனுவை நான் தான் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் என் மகனுக்கு திடீரென உடல் நடுக்கம் ஏற்பட்டு பின்னோக்கி மல்லாந்து கிழே விழுந்துவிட்டான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவறாக குறிப்பிட்டுள்ளார்கள். மேற்சொன்னவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

போலீசார் விசாரணையில் மகனுக்கு உடல் நடுக்கம் ஏற்பட்டு பின்னால் விழுந்துவிட்டதாக சொல்லியுள்ள உண்மை சங்கதியை மறைத்து தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டில் இருந்து சம்பவ இடம் சுமார் 15 கிமீ தூரம் இருக்கும் என்றால் இல்லை. 7 கிமீ தூரம் இருக்கும். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் எனது உறவினர் என்றால் சரிதான். விபத்திற்காக நஷ்டஈடு பெறவேண்டி குற்றம் சுமத்தப்பட்ட நபரை இவ்வழக்கில் சேர்த்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram.